## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர்

ஐக்கிய அமெரிக்காவின் அறிக்கை

வில்லியம் ஜே. மொஸ்சியர்ஸினால் நிகழ்த்தப்பட்ட உரை

ஜெனீவா, மார்ச் 22, 2017.

ஐ. நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அவர்களே! தங்களின் விரிவான அறிக்கைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். தங்கள் அலுவலகத்துடனான இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பினையும் ஆணையிடுபவர்களின் விசேட செயற்பாடுகள் தொடர்பாக, ஐக்கிய அமெரிக்காவும் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம், இலங்கையானது மனித உரிமைகள், நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறுப்புடைமைகள் ஆகியவற்றிற்கான திறவுகோலை அமுலாக்கும் நோக்குடன் முக்கியமான படிமுறைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, இலங்கை முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுடனும் பொதுமக்கள் சமூகத்துடனும் அரசாங்கம் மேற்கொள்ளும் பொது ஆலோசனைகளை நாம் பரிந்துரைக்கின்றோம். ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரின் ஒன்றிணைந்த முயற்சியினையும் இன்னும் சில புதியவற்றை உள்ளடக்கிய ஜனநாயக அரசியலமைப்பு, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றினை நிறுவுவதற்கு சட்டவாக்கத்தினை நிறைவேற்றுதல், பலவந்தமான முறையில் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாக ஒப்புதலளிக்கும் சமவாயம் என்பவற்றிற்கான வரைவினை நாமும் இங்கு அடையாளம் காண்கின்றோம்.

இந்த நல்லிணக்கச் செயல்முறைகள் சிக்கலானவை. ஆனால் கடந்த பதினெட்டு மாதங்களிற்கும் மேலாக நீடித்த மற்றும் பாரியதொரு முன்னேற்றத்தைக் காண்பதில் நாம் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளோம். உள்நாட்டு மோதல் காலத்தின்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பல ஏக்கர் கணக்கிலான காணிகளில் கிட்டத்தட்ட 4500 ஏக்கர் வரையான காணிகள் தனிப்பட்ட நிலவுரிமையாளர்களிற்கு மீளவும் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரால் பலவந்தமான மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகள் முன்னைய அரசாங்கத்தின் அறிக்கைகளிலிருந்து பரந்தளவில் குறைந்துள்ளன. பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட பலவந்தமான கைது நடவடிக்கைகள் மற்றும் தடுப்புக் காவல், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள் பற்றி நாம் அறிக்கைகள் மூலம் கருத்தில் கொள்கின்றோம். எந்தவொரு காலத்திலும் சர்வதேசத்தின் பங்குபற்றுகைக்கு எதிராக அரசாங்கத்தின் கருத்துக்கள் நீதித்துறைசார் செயற்பாடுகளின் நேர்மை பற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களிற்கிடையே புரிந்துணர்வான அக்கறையை இலங்கையின் நீதித்துறைப் பொறிமுறைகள் அதிகரிக்கின்றன. அரசாங்கம் தனது சர்வதேசப் பொறுப்புடைமையை முழுமையாக அமுல்படுத்துவதற்கான வாக்கினையும் உறுதிப்பாட்டையும் உறுதியாகக் கொண்டிருக்கின்றது என்றும் அது இன்னமும் நீடித்ததொரு சமாதானத்தைக் கோருகின்றது என்பதும் வெளிப்படையானதாகும்.

எனவே, இச்சபையின் தீர்வில் 30/1 வரைவு செய்து பொறுப்புடைமையினதும் மறுசீரமைப்பினதும் அமுலாக்கத்திற்காக பொதுவான கால அட்டவணையையும் தந்திரோபாயங்களையும் தயாரிப்பதற்கு நாம் இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்கமளிக்கின்றோம். அரசியலமைப்புத் திருத்தம், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தினை நிறுவி இயக்குதல், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கம், நம்பிக்கை ஆணைக்குழுவினை நிறுவுதல், இராணுவத்தினரின் கைவசம் உள்ள நிலங்களை விடுவிக்கும் நிலை தொடருதல் மற்றும் நிலுவையிலுள்ள அனைத்து சர்வதேச பொறுப்புக்களையும் முழுமையாக அமுல்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளிற்கு முன்னுரிமை அளிககப்படுதல் வேண்டும். நீடித்த சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான இத்தகைய செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான

ஒப்பந்தத்தைத் தொடர்வதற்கு ஐக்கிய அமெரிக்கா ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

நன்றி, வணக்கம்.

# # #